தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் "எதிர்கால மருத்துவம் 2.0" மாநாடு தொடர்பான கலந்தாலோனை கூட்டம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் முனைவர் ப.செந்தில்குமார், துணை வேந்தர் மரு.நாராயணசாமி, இயக்குநர்கள் மரு.அருண்தம்புராஜ், மரு.வினித், மரு.சோமசுந்தரம், மரு.சுகந்தி, இராஜகுமாரி, மரு.சித்ரா, மரு.பார்த்தசாரதி மற்றும் அமெரிக்க தமிழ் மருத்துவர்கள் சங்க தலைவர் மரு.கபிலன் ஆகியோர் உடனிருந்தனர்.

உடனடியாக வந்து மேலும் உயிர்ச்சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய

செந்தில் பாலாஜிக்கு நன்றி சொல்லாவிட்டாலும் இடையூறு செய்யாதீர்கள்!

கரூர் துயர சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பின் கமலஹாசன் எம்.பி. பேட்டி!

கரூர், அக். 8 –

நேரத்திற்கு வந்து மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய செந்தில்பாலாஜிக்கு நன்றி சொல்லாவிட்டாலும் இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும் என கரூர் சம்பவ இடத்தை பார்வையிட்ட கமலஹாசன் எம்.பி. செய்தியாளர்களிடம் கூறினார்.

கரூர் வேலுச்சாமிபுரம் விஜய் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் மயக்கம் அடைந்து 41 பேர் இறந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து யாருக்கும் ஆறுதல் கூற விஜய் வரவில்லை. அறிவித்த உதவி தொகையையும் வழங்கவில்லை. அடுத்த கட்ட தலைவர்கள் கைதுக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர். இந்த சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காயம் அடைந்தனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 10 லட்சம், காயமடைந்த குடும்பத்திற்கு தலா ஒரு லட்சமும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. சம்பவம் நடந்தவுடன் இதை கேள்விப்பட்டு உடனடியாக கரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமலஹாசன் அவர்கள், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ உடன் சென்று, கரூரில் எதிர்பாராத கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை, நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். நிவாரண உதவிகள் வழங்கினார்கள்.

மேலும் விபத்து நிகழ்ந்த இடத்தை ஆய்வு செய்தார். கழக நிர்வாகிகள், மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்..

பகுதியை பார்வையிட்ட மக்கள் நீதி மையம் கட்சி தலைவர் கமல ஹாசன், வேலுச்சாமி புரத்தைச் சேர்ந்த உயிரிழந்த மகேஸ்வரி (43 வயது) இல்லத்திற்கு சென்று அவரது உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். அப்போது நிவாரண உதவியாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை உறவினர்களிடம் வழங்கினார்.

பின்னர் கமலஹாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஊடகங்கள் வாயிலாக பல உண்மைகள் இன்று வெளிவந்துள்ளது. இது யாரையும் பாராட்டுவதற்கான நேரம் இல்லை. செந்தில் பாலாஜி உடனடியாக எப்படி வந்தார் என்ற குற்றச்சாட்டு வைக்கின்றனர். இது அவருடைய சொந்த ஊர், அவர் எப்படி உடனடியாக வந்தார் என்று கேள்வி எழுப்புவது தவறு. நேரத்துக்கு வந்து மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய செந்தில் பாலாஜிக்கு நன்றி சொல்ல வேண்டும்.இது அவர் ஏரியா.அவரது மக்கள். அவர் வராமல் யார் வருவார்கள்?.

பெரும் மக்கள் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றினார். அவருக்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டாம். இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும். அவர் செய்வதை செய்யட்டும். செந்தில் பாலாஜி ஏன் வந்தார் என கேட்பதைவிட வந்ததை நினைத்து சந்தோஷப்பட வேண்டும்.அது அவர் கடமை. என்ன முடியுமோ அதை செய்திருக்கிறார்

உயிரிழந்தவர்களை எத்தனை பேர் என்று எண்ணிக்கை அளவில் பார்க்க கூடாது. அவர்களுக்கும் குடும்பம் உள்ளது என்பதை பார்க்க வேண்டும். தமிழ்நாடு அரசும், முதலமைச்சர் அவர்களும், சிறப்பாக செயல்பட்டுள்ளனர். இது போன்ற கூட்டங்களை ஊரிலிருந்து ஒதுக்குப்புறமான இடங்களில் நடத்த வேண்டும்.

த.வெ.க. சார்பில் முன்னதாக அனுமதி கேட்கப்பட்ட லைட் ஹவுஸ் கார்னர் பகுதியில் ஆற்றில் மக்கள் விழுந்திருந்தால், இதை விட அதிக உயிர் சேதம் ஏற்பட்டிருக்கும்.

நான் பேசுவது மனிதம். எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்டோர் பேசுவது அரசியல். இந்த நேரத்தில் அரசியல் பேசுவது தவறு. அடுத்தடுத்த மாதங்களில் அது குறித்து பேசலாம். இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, அனைத்துக் கட்சிகளும் அமர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவெடுக்க வேண்டும். முதலமைச்சரும் அதற்கான சட்டத்தை இயற்ற வேண்டும்.

நாம் எவ்வளவு பணம் கொடுத்தாலும், உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஈடாகாது. யார் எவ்வளவு பணம் கொடுத்தார் என்று போட்டி வேண்டாம். அவர்களுக்கு நீதி தான் வேண்டும். இது யாரையும் குற்றம் சொல்வதற்கான நேரமில்லை. இதில் நான் உட்பட அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். அதே சமயத்தில், குற்றம் சாட்டுபவர்கள் யார் என்பதையும் பார்க்க வேண்டும்.

விஜய்க்கு நான் அறிவுரை சொல்லத் தேவையில்லை. நான் என் சார்பில் மட்டுமே பேச வந்திருக்கிறேன். அரசியலில் என்னைவிட மூத்தவர்கள் உள்ளனர். அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகளை நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது. காலம் கடந்து அறிவுரை சொல்வதில் அர்த்தம் இல்லை.

இனி அவர் ஒரு தலைவராக செய்ய வேண்டியதை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். நான் எவ்வளவு நிதி உதவி கொடுத்தேன் என்று சொல்லிக்காட்டுவது அசிங்கம். சட்டம் ஏற்பாடு செய்து வருகிறது. எஸ்ஐடி. குழு அமைக்கப்பட்டுள்ளது. நாம் விசாரிப்பதை விட குழுவின் விசாரணை ஆழமாகவும், உறுதியாகவும், நேர்மையாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். விஜய்க்கு என்ன அறிவுரை கூறுகிறீர்கள் என நீங்கள் கேட்கிறீர்கள். நீதிமன்றம் சொல்லும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை பள்ளி மாணவர்களுக்கு

வேலைவாய்ப்பு போட்டித் தேர்வு குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி!

மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.8-

மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் வேலை வாய்ப்பு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்குத் தேவையான விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்குதல் குறித்து ஆசிரியர்களுக்கான பயிற்சியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (07.10.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்ட ரங்கில் தொடங்கி வைத்தார்.

மேயர் அவர்களின் அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சியினை வழங்குவதற்காக 162 ஆசிரியர்கள் மற்றும் இப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மாநில தொழில் வழிகாட்டுதல் மைய அலுவ லர்கள் வாயிலாக இப்பயிற்சி இன்று வழங்கப்பட்டது.

இப்பயிற்சியினைத் தொடங்கி வைத்து மேயர் பேசும்போது தெரிவித்ததாவது:

முதலமைச்சர் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி பல்வேறு சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் கல்விக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை இந்தியாவில் பிற மாநிலங்களும் இதனைப் பின்பற்றி செயல்படுத்தி வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பில் கல்விக்கான பல்வேறு புதிய அறிவிப்புகள் வழங்கப்பட்டது. அதில் ஒன்றாக சென்னை பள்ளிகளில் 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுவதற்கான சிறந்த பயிற்சியினை தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் வாயிலாக நடத்திட அறிவிக்கப்பட்டு அதன்படி, இன்றைய தினம் தேர்வு செய்யப்பட்ட சென்னை பள்ளிகளின் 162 ஆசிரியர்கள் மற்றும் அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாநில தொழில் நெறி வழிகாட்டும் மையம் அலுவலர்கள் வாயிலாக விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி இன்று நடைபெறுகிறது.

சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பல்வேறு திட்டங்களின் வாயிலாக கல்வி மேம்பாடு வழங்கப்பட்டு வருகிறது. இந்த போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சியின் மூலம் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் முழுமையாக தங்களை தயார்படுத்திக் கொண்டு மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசு உள்ளிட்ட அரசு தொடர்புடைய துறைகளுக்கான தேர்வுகளை மன உறுதியுடன் எதிர்கொள்ள முடியும். இந்த பயிற்சி அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மூன்று மாதங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். இதன்மூலம், தன்னம்பிக்கையும் மாணவர்களுக்கு உருவாகிடும். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பயில்வதற்கும் வேலை வாய்ப்பு தேர்வுகளில் கலந்து கொள்வதற்கும் விண்ணப்பி த்தல், உரிய சான்றுகளை இணைத்து வழங்குதல், போட்டித் தேர்வுகளை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுவதன் மூலம் மாணவர்கள் உயர்வான நிலைக்குச் செல்ல முடியும். இதற்காக ஆசிரியர்கள் முழு ஈடுபாட்டுடன் மாணவர்களுக்கு பயிற்சியினையும் வழிகாட்டுதலையும் வழங்கிட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விஸ்வநாதன், மாநில தொழில் நெறி வழிகாட்டும் மைய இணை இயக்குநர் திருமதி அ.அனிதா, துணை இயக்குநர் திருமதி ந.சி. கலைவாணி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரக துணை இயக்குநர் திருமதி கு.கவிதா, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் திருமதி ப.ரங்கநாயகி மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க.தொண்டரணி தஞ்சை தெற்கு, மத்திய,வடக்கு, கும்பகோணம் மாநகரம்,திருவாரூர், மயிலாடுதுறை மாவட்ட தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தொண்டர் அணி செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில் பட்டுக்கோட்டையில் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர் த. பழனிவேல்,கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கரூர் நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்தும், வருகின்ற சட்டமன்ற தேர்தலில் கழக ஆட்சி அமைய தொடர்ந்து கழக பணி ஆற்றிடவும், துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை தேக்வாண்டோ உள்ளிட்ட போட்டிகள் நடத்தி சிறப்பாக கொண்டாடவும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தஞ்சை தெற்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கா.கதிரவன் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

‘திராவிட மாடல்’ அரசைப் பாராட்டும் ஐ.நா. அவையும் - உலக வங்கியும்!

இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. பல்வேறு புள்ளி விவரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. அதிக வருமானம் உடைய பிரிவினர் கடந்த 8 ஆண்டுகளில் 6 இலட்சம் பேர் இந்தியாவைவிட்டு வெளியேறி விட்டனர். வெளியேறிவிட்டார்கள் என்றால் இங்கே முதலீடு செய்த பணத்தை, பல இலட்சம் கோடிகளைக் கொண்டு சென்று விட்டார்கள். இந்தியாவின் ஏற்றுமதி குறைந்து கொண்டு வருகிறது. இறக்குமதியும் குறைந்து கொண்டே வருகிறது. பொருளாதார உற்பத்தி முறையில் தனியார் புகுந்து தனியார் இலாபம் பெறுவதற்காகத்தான் ஒன்றிய அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலை செய்து கொண்டிருக்கிறது.

இதற்கு நேர் மாறாக பெரியார் அண்ணா கலைஞரின் கொள்கை வாரிசான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசை ஐ.நா.வும் உலக வங்கியும் இந்தியாவின் பிரபல பத்திரிகைகளும் ஒன்றிய அரசும் ஒன்றிய அரசு அமைத்த குழுக்களும் மனதார வாழ்த்தி பாராட்டி வருகின்றன..

தமிழ்நாடு அரசை நிதிக் குழு பாராட்டியது

டாக்டர் அரவிந்த் பனகாரியா தலைமையில் 16வது நிதிக்குழு தமிழ்நாடு வந்தபோது நமது கோரிக்கைகள் அனைத்தும் முன்வைக்கப்பட்டன. அவற்றில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை 50 சதவிகிதமாக அதிகரித்தல், நிதிப் பகிர்வுக்கு முற்போக்கான கணக்கீட்டு முறையை பின்பற்றுதல், மாநிலங்களின் செயல்திறனுக்கு உரிய நிதிப் பகிர்வு அளித்தல் போன்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டன. தமிழ்நாட்டின் அறிக்கை குறித்து ஆணையம் தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிடல் மாடல் நாயகன் கழகத் தலைவர் அவர்களின் நிர்வாகத் திறன் மேன்மையை ஐ.நா. அமைப்பும், ஒன்றிய அரசின் நிறுவனங்களும் பாராட்டியுள்ளன. தமிழ்நாடு இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் முன்னணி மாநிலமாக திகழ்வதாக அதில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சராக கழகத் தலைவர் அவர்கள் 2021மே மாதம் 7ஆம் நாள் பொறுப்பேற்றது முதல் நிறைவேற்றி வரும் புதுமையான, புரட்சிகரமான திட்டங்களால் தமிழ்நாடு மிகக் குறுகிய காலத்தில் பல வெற்றிகளை பெற்று சாதனைகள் புரிந்து தேசிய அளவில் முதல் இடம் என்னும் பெருமையை நிலைநாட்டியுள்ளது.

‘இந்தியா டுடே ஆங்கில இதழ்’ ஒன்றின் இயக்குநர் கூறுகையில், “இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களின் செயல்பாடுகளை கணித்ததாகவும், அதில் ஒட்டு மொத்த செயல் திறனிலும் சிறந்து விளங்கும் பெரிய மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும்” குறிப்பிட்டிருந்தார்.

முதலமைச்சர், “இந்த கடிதத்தைப் படித்தபோது எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; இது தனிப்பட்ட எனக்கு கிடைத்த பெருமை அல்ல, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த பெருமையாகும். தமிழ்நாட்டிற்கு கிடைத்த சிறப்பாகும்” என்று 29.11.2021 அன்று சென்னையில் நடந்த விருது வழங்கும் விழாவில் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் 23.11.2021 அன்று நடந்த முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு மாநாட்டில், ‘தொழில் நிறுவனங்கள் நம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கு ‘நிலம்’ கையிருப்பு மிகப்பெரிய பங்காற்றுகிறது. அண்மையில் வெளிவந்த ஒன்றிய அரசினுடைய மாநிலங்களுக்கான IPRS தரவரிசையில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாக அறிவித்திருக்கிறது. இது நமக்கெல்லாம் பெருமை. நாம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற லட்சிய இலக்கினை அடைவது வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கையை எல்லோருக்கும் அளித்துக் கொண்டிருக்கிறது’ என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

ஆங்கில இதழ் 2020 ஆய்வறிக்கையில், 2021 மே மாதம் முதல்வர் ஆக தளபதி அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன் தமிழ்நாட்டில் இருந்த முந்தைய ஆட்சியில் தமிழ்நாடு எந்த அளவில் பின்தங்கி இருந்தது என்பதை 7.12.2020 நாளிட்ட, ‘ஆங்கில இதழ் ஆய்வு அறிக்கை’ புள்ளி விவரங்களோடு தெளிவுபடுத்தி இருந்தது. இந்திய அளவில் 20 மாநிலங்களை ஆய்வு செய்து வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் தமிழ்நாடு,

அ.தி.மு.க. ஆட்சியின் அவல நிலை!

உள்கட்டமைப்பில் 20வது இடம் - கடைசி இடம், ஐந்து ஆண்டுகளின் செயல்பாட்டில் 19வது இடம், விவசாயத்தில் 19வது இடம், சுற்றுலாவில் 18வது இடம், உள்ளடக்கிய வளர்ச்சியில் 18வது இடம், தொழில் முனைவோர் முன்னேற்றத்தில் 14வது இடம், ஆட்சி நிர்வாகத்தில் 12வது இடம், தூய்மையில் 12வது இடம், சுகாதாரத்தில் 11வது இடம், கல்வியில் 8வது இடம் என அன்று நிலவிய தமிழ்நாட்டின் அஇஅதிமுக ஆட்சியின் அவல நிலையை படம் பிடித்துக் காட்டி உள்ளது ‘இந்தியா டுடே’ ஆய்வறிக்கை.

‘திராவிட மாடல்’ ஆட்சியில் நீடித்த – நிலையான வளர்ச்சி!

2023-24 ஆம் ஆண்டிற்கான, ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு திராவிட மாடல் ஆட்சியில் நீடித்த நிலையான வளர்ச்சி குறியீடுகள் குறித்த நான்காவது ஆய்வறிக்கையை 2024, ஆகஸ்ட் மாதம் வெளியிட்டது. அந்த அறிக்கையில், திராவிட மாடல் ஆட்சி தொலைநோக்கு சிந்தனைகளுடன் செயல்படுத்தி வரும் சீரிய திட்டங்களால் வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுச் சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று பாராட்டி உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் 2023-24 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி குறித்த ஆய்வேடு மனித வளங்களை வளர்ப்பதில் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களைவிட தமிழ்நாடு முன்னேற்றம் கண்டு இந்தியாவில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளது என்று பாராட்டி உள்ளது. ஒன்றிய அரசின் நிர்யாத் நிறுவனம் ஜவுளி துணிகள் ஏற்றுமதி குறித்து 2022-23 ஆம் ஆண்டிற்கான ஆய்வறிக்கையில் தேசிய அளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த ஜவுளி துணிகளின் மதிப்பில் தமிழ்நாடு ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கினை, அதாவது, 22.58 சதவீத துணிகளை ஏற்றுமதி செய்து தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது என்று பாராட்டி உள்ளது.

சைதை சாதிக்
தலைமைக் கழக பேச்சாளர்

2022-23 ஆம் ஆண்டிற்கான தேசிய இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தக ஆண்டாய்வு பதிவுகள் குறித்த அறிக்கையில், தமிழ்நாடு மட்டும் 5.30 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்து இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது என்றும் அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலினின் முத்திரைத் திட்டங்களில் ஒன்று புதுமைப்பெண் திட்டம். அரசு பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் படித்து உயர்கல்வியில் சேரும் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தினால் கல்லூரிகளில் சேரும் மாணவியர் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என மாநில திட்டக்குழு தனது ஆய்வின்மூலம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் 31.1.2025 அன்று 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. அதில், தோல் பொருட்கள் உற்பத்தி துறையில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் 79வது பொதுச்சபையில் சர்வதேச பணிமுனைப்பு குழு விருது** United Nation Interagency Task Force Award **25.9.2024 அன்று அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.** 2024-25ம் ஆண்டில் பொருளாதாரத்தில் தமிழ்நாடு 9.69 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்துடன் இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மேலும் இது, கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் ஆகும்.

இதற்கு முன், 2017-18ம் ஆண்டில் அதிக வளர்ச்சி வீதம் 8.59 சதவீதமாக இருந்தது. 2020-21ம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குறைந்தபட்சமாக 0.07 சதவீதம் என பதிவாகியது. இக்காலகட்டத்தில் பல மாநிலங்களில் வளர்ச்சி இறங்குமுகமாக இருந்தன. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் வளர்ச்சி ஏறுமுகமாகவே இருந்தது என குறிப்பிட்டுப் பாராட்டப்பட்டது.